முழுபபதிப்புரிமையுடையது [All Rights Reserved]

**மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்**
**Provincial Department of Education, Northern Province**

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) முன்னோடிப் பரீட்சை 2017 மே**
**General Certificate of Education (Adv. Level) Pilot Examination, 2017 May**

| | | |
|---|---|---|
| தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் I<br>**Communication and Media Studies I** | **29 T I** | **இரண்டு மணித்தியாலம்**<br>**Two Hours** |

அறிவுறுத்தல்:

1. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
2. விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
3. விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை கவனமாக வாசித்து பின்பற்றுக.
4. 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1) (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளின் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிந்தெடுத்து விடைத்தளில் புள்ளடி(✕) இடுவதன் மூலம் காட்டுக

1) “ பொது மக்களின் பிரதிநிதித்துவத்துடன் தொடர்பாடலையும் ஊடகத்தையும் கையாளுதல் அரசாங்கத்தின் பொறுப்பில் இருக்க வேண்டும்'' எனும் எண்ணக்கருவை வலியுறுத்தும் தொடர்பாடல் கோட்பாடு
   1. அபிவிருத்தி தொடர்பாடல் கோட்பாடு
   2. ஆதிகாரத் தொடர்பாடல் கோட்பாடு
   3. ஜனநாயகத் தொடர்பாடல் கோட்பாடு
   4. சோவியத் சமவுடைமைக் கோட்பாடு.
   5. சமூகப் பொறுப்புக் கோட்பாடு.

2) எழுதுவதற்காக புராதன காலத்தில் பயன்படுத்தப்பட்ட பொருட்களைக் கொண்ட கூட்டம் அடங்கும் தொகுதி.
   1. கடதாசி, பிளாஸ்ரிக், மென்பொருள்
   2. பப்பிரஸ் ஓலைகள், தோல், கணினிமென்பொருள்
   3. தொலைபேசி, பப்பிரஸ் ஓலைகள், கற்பாறைகள்.
   4. தோல், பப்பிரஸ்ஓலைகள், மரப்பட்டைகள்
   5. கணினீ மென்பொருள், புடவை, தோல்

3) தொடர்பாடற் பணிகள் பல இருப்பினும் அதில் பிரதானமான பணியாகக் கருதக்கூடியது.
   1. சமூக ஒழுங்கமைப்பைப் பேணுதல்.
   2. கருத்து ரீதியாக ஒற்றுமைகளை வளர்த்தல்.
   3. முரண்பாடுகளை தோற்றுவித்தல்.
   4. மேலைத்தேய கலாசாரத்தை ஏற்றுக் கொள்ளுதல்.
   5. நிகழ்காலச் செயற்பாட்டுடன் இணைந்து விடுதல்

4) உள்ளகத் தொடர்பாடலின் மிக முக்கியத்துவம் வாய்ந்த எண்ணக்கருவாக அமைவது.
   1. சிறந்த பேச்சாளர் 2. பொறுமை
   3. சகிப்புத் தன்மை 4. சுயபார்வை, சுய எண்ணக்கரு
   5. பொதுநலன்

5) வாய்மொழியல்லாத தொடர்பாடலின் பணிகளை வரையறை செய்த அறிஞர்கள்.
   1. கலீ , மற்றும் லெதர்ஸ் 2. ஒஸ்ருட் மற்றும் லாஸ்வெல்
   3. ஷெனான் மற்றும் வீவர் 4. டேவிட், மார்ஷல்
   5. கலீ, மற்றும் லாஸ்வெல்

6) வாய் மொழியல்லாத் தொடர்பாடலின் பணிகள் அல்லாதவை.
   1. கருத்தை விளங்கிக் கொள்ள உதவும்.
   2. நன்கு உணர்வுடன் வெளிப்படுத்தப்படும்
   3. வினைத்திறன் வாய்ந்தது.
   4. தன்னை அறியாமல் பழக்கதோசத்தில் நிகழக் கூடியது.
   5. மொழி பற்றிய தேர்ச்சி அவசியமானது.

7) A.- மனித வரலாற்றின் ஒரு நவயுகம்.
B- புதிய கலாசார வடிவங்கள் தோன்றுதல்
C- தகவலை அடிப்படையாகக் கொண்டது.
D- சமூகத்தின் எதிர்பார்ப்புக் கேற்ப நடத்தல்
E- சிந்தனைச் சிறப்பு இயல்பு காணப்படுதல்.

மேற் கூறப்பட்டவற்றில் அறிவுச் சமூகத்திற்கான பண்பாகக் கொள்ளக் கூடியது.
1. A, D, E 2. A, C, E 3. A, B, C 4. A, B, D 5. B, C, D

8) கடுமையான பொருளாதார, அரசியல், கலாசாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகக் செயற்படும் ஊடகம்.
1. மாற்று ஊடகம் 2. குடிமை ஊடகம் 3. தொலைக்காட்சி ஊடகம்.
4. வானொலி ஊடகம் 5. பத்திரிகை ஊடகம்

9) வெகுசன ஊடகங்களின் இயல்புக்கிணங்க சில சந்தர்ப்பங்களில் மொழியின் மிக இலகுவான சுருக்கப் பதங்களைப் பயன்படுத்த வேண்டியிருக்கும் இந்நிலைமை பெரும்பாலும் காணப்படுவது.
1. பத்திரிகை ஊடகத்தில் 2. வானொலி ஊடகத்தில்
3. தொலைக்காட்சி ஊடகத்தில் 4. சினிமா ஊடகத்தில்
5. புதிய ஊடகத்தில்.

10) மகாபாரதக் கதையை வகுப்பில் கற்பித்த ஆசிரியர் கதையில் மிகவும் கவரந்த ஒரு சந்தர்ப்பதை சித்திரமாக வரையும் படி மாணவர்களுக்குக் கூறினார். மாணவரிடமிருந்து ஆசிரியர் எதிர்பார்க்கக் கூடியது.
1. ஓவியம் பற்றிய திறனை அளத்தல்
2. படைப்புத் தொடர்பாடல் திறன்களை இணங்காணுதல்
3. யாதாயினும் ஒன்றை நிச்சயமாக இணங்காணும் ஆற்றலை அறிந்து கொள்ளல்.
4. கலை தொடர்பாக உள்ள விளக்கத்தை அவதானித்தல்
5. நாட்டார் கதை பற்றிய விளக்கத்தை இணங்காணல்

11) கிராம அபிவருத்தி நடவடிக்கைகளுக்கு தொடர்பாடலைப் பயன்படுத்துவதற்கு மிகவும் பொருத்தமான மாதிரி.
1. பரிமாற்ற மாதிரி 2. அபிவிருத்தி செய்தி மேம்பாடு
3. பாரம்பரிய அடையாளம் மூலம் அபிவிருத்தி 4. மக்கள் ஊடக மாதிரி
5. சீன மாதிரி

12) பின்வரும் கூற்றுக்களுக்குள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்துக்கு பொருந்தாத கூற்றினைத் தெரிவு செய்க.
A.- தன்னம்பிக்கையை கட்டியெழுப்புதல்
B- தங்கி வாழும் மனநிலையை உருவாக்குதல்.
C- மக்கள் பங்களிப்பை வளர்த்தல்
D- பாரம்பாரியத்தைப் பேணிப்பாதுக்காத்தல்
E- அபிவிருத்திச் செயற்பாட்டை கட்டியெழுப்புதல்.
1. A, C 2. A, B 3. B, C 4. A, D 5. B, D

13) 1. ஆக்கங்கள் நொடிக்கதை வடிவத்தை பெறுதல்
2. பிரமாண்டமான திரை பயன்படுத்தல்
3. ஒலி- ஒளி ஊடகமாகும்
4. இருளுடன் தொடர்புடைய விடயம்.

மேலே தரப்பட்ட கூற்றுக்களுக்குள் பொருந்தக்கூடிய பண்புடைய ஊடக விதி.
1. அச்சு ஊடக விதி 2. வானொலி ஊடக விதி
3. சலன ஊடக விதி 4. நவீன ஊடக விதி
5. அச்சு, வானொலி இணைந்த ஊடக விதி

14) வாழ்க்கைப் பாத்திரங்கள், வரலாற்றுச் சம்பவங்கள், யுகப் புரட்சிகள், ஆளுமைகள், தரவுகள் காலங்கள் போன்றவற்றை விமர்சித்தல்லானது.
1. அரசியல் சார் பிரவேசம். 2. மோழி சார் பிரவேசம்
3. நல்லொழுக்க சார் பிரவேசம் 4. ஆழகியல் சார் பிரவேசம்
5. வரலாற்றுச் பிரவேசம்.

15) சிறு குழந்தைகளது அறிவாற்றலை மட்டுமன்றி பெரியோரது அறிவாற்றல் மற்றும் அறிவை வெளிப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் ஆக்க ரீதியான தொடர்பாடல் வடிவம்.
1. கிரியைகள்
2. புதிர்கள்
3. பழமொழிகள்
4. உவமைகள்
5. நாடகங்கள்

16) ஊடக எழுத்தறிவு என்பது.
A.- செய்திப் பத்திரிகையை வாசிக்கவும் எழுதவும் உள்ள ஆற்றல்.
B- வெகுசன ஊடக செய்திகளை இணங்காண்பதற்கு உள்ள ஆற்றல்.
C- வெகுசன ஊடக செய்திகளை திறனாய்வுடன் விளங்கும் ஆற்றல்.
D- வெகுசன ஊடகங்களிலிருந்து உருக்களை புள்ளி விபரங்களை விளங்கிக் கொள்ளும் ஆற்றல்
மேற் குறித்த கூற்றுக்களில் உண்மையானது.
1. A,C ஆகியன மாத்திரம்
2. A,D ஆகியன மாத்திரம்
3. B,C ஆகியன மாத்திரம்
4. C,D ஆகியன மாத்திரம்
5. A,B ஆகியன மாத்திரம்

17) வாயிற்காற்போர், பரந்து பட்ட வாங்கிக் கூட்டம் மற்றும் கூட்டு முயற்சியுடன் தொடர்புபட்ட தொடர்பாடல் வகை.
1. மக்கள் தொடர்பாடல்
2. பொதுசன தொடர்பாடல்
3. நபரிடைத் தொடர்பாடல்
4. நபரகத் தொடர்பாடல்
5. கூட்டுத் தொடர்பாடல்

18) “கருதுகோள்” ஒன்றினை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படுகின்ற ஊடக ஆய்வு முறைமை தொடர்புபட்டமைவது.
1. விஞ்ஞான முறையுடன்.
2. புலக்காட்சி முறையுடன்
3. செய்முறை முறையுடன்
4. விமர்சன முறையுடன்
5. பகுப்பாய்வு முறையுடன்

19) மோசமான தொடர்பாடுபவரின் பண்பாக கொள்ள முடியாது.
1. பெறுநருக்கு பயனற்ற செய்திகளை வழங்குதல்.
2. இருவழித் தொடர்புக்கு வாய்ப்பு வழங்குதல்.
3. கேட்கப்படாத செய்திகளையும் தொடர்பாடுதல்.
4. நோக்கின்றிய தொடர்பை முன்னெடுப்பவர்.
5. தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கு உட்பட்டு தொடர்படுதல்

20) தொலைக்காட்சி ஊடக பயன்பாட்டின் அதிகரிப்பினால் ஏற்பட்டுள்ள விளைவு அல்லாது .
1. மாலை நேர விளையாட்டு உயர்மட்டத்தில் செல்லல்.
2. திரையரங்குகளில் மக்கள் கூட்டம் குறைவடைந்துள்ளது.
3. குழந்தைகளின் பயனுள்ள பொழுதுபோக்கு குறைவடைந்துள்ளது.
4. பிள்ளை – பெற்றோர் தொடர்பு இழி நிலைக்கு செல்லல்.
5. பொது நிகழ்வு பங்கேறபு குறைவடைதல்

21) நிலந்தி என்பவர் தனக்குத் தேவையான நிகழ்ச்சிகளை மாத்திரம் தெரிந்தெடுத்து தொலைக்காட்சியை இரசிக்கின்றவராவர். அவர்.
1. தொலைக்காட்சி ஊடகத்தினால் உரிய பலனைப் பெறவில்லை.
2. விமர்சனமான தொலைக்காட்சி இரசிகையாவார்.
3. தொலைக்காட்சிகளின் வலுவை அறிந்து கொள்ளவில்லை.
4. தொலைக்காட்சி இரசிப்பதற்கு குறைந்த நேரம் உடையவராவர்.
5. மந்த பெறுநர் ஆவார்.

22) ஒரு பத்திரிகையில் பிரசுரிக்கப்பட ஒளிப்படப் போட்டியின் தகவல்களைக் கண்ட ஆசிரியர் அதைப் பற்றி வகுப்பறையில் தனது மாணவர்களுக்குக் கூறினார். ஆதற்குச் செவிமடுத்த சுரேஷ் தான் போட்டிக்கு முன்வைக்கக் கூடிய ஒளிப்படத்தைப் பற்றித் தானே தனியாகச் சிந்தித்தான். இங்கு நடைபெற்ற தொடர்பாடலின் வகை ஒழுங்கு முறைப்படி.
1. சுயமான தொடர்பாடல், வெகுசனத் தொடர்பாடல் சிறிய குழுத் தொடர்பாடல்
2. வெகுசனத் தொடர்பாடல், சிறிய குழுத் தொடர்பாடல், அகவயத் தொடர்பாடல்.
3. ஆளுள் தொடர்பாடல், சிறிய குழுத்தொடர்பாடல் நபர்களுக்கிடையேயான தொடர்பாடல்.
4. வெகுசனத் தொடர்பாடல், அகமுகித் தொடர்பாடல் ஆட்களிடைத் தொடர்பாடல்.
5. ஆளிடைத் தொடர்பாடல், கூட்டுத்தொடர்பாடல், வெகுசனத் தொடர்பாடல்.

23) நாம் அன்றாட வாழ்க்கையில் பேசும் போது அவற்றை வெற்றிகரமாக்குவதற்குப் பெரும்பாலும் பயன்படுத்துவது.
1. சரியான மொழிப்பிரயோகமும் அர்த்தமுள்ள கை அசைவுகளும்.
2. சரியான மொழிப் பிரயோகமும் கட்புல இணைப்பும்.
3. சரியான தெளிவுள்ள மொழியும் அர்த்தமுள்ள கை அசைவுகளும்.
4. கட்புல இணைப்பும் எளிய தெளிவுள்ள மொழியும்.
5. கட்புல இணைப்பும் , தேசிய மொழியும்.

24) உங்களுக்குப் பத்திரிகையில் சிறு விளம்பரம் ஒன்றைப் பிரசுரிக்க வேண்டியதாக உள்ளது. பிரதானமாகச் சிறு விளம்பரங்களுக்கு எடுக்கப்படுகின்ற பணத்தின் பெறுமதியைத் தீர்மானிப்பது.
1. விளம்பரம் பிரசுரிக்கப்படுகின்ற பக்கமும் அதன் இடமுமாகும்.
2. உள்ளடக்கப்படுகின்ற சொற்களின் எண்ணிக்கையாகும்.
3. விளம்பரத்திற்கு வர்ணம் பிரயோகப்படுத்தலும் அல்லது பிரயோகிக்கப்படாமையாகும்.
4. விளம்பரத்திற்குப் பயன்படுத்தப்படும் இடத்தின் அளவாகும்.
5. விளம்பரத்தின் நீளம், அகலம் ஆகும்.

25) தேசிய மின்சாரத் திட்டமொன்றை ஆரம்பித்து வைப்பது பற்றி எல்லா ஊடகங்களையும் அறிவுறுத்தல் செய்வதற்காகப் பத்திரிகை மாநாடு ஒன்றை நடாத்த ஆலோசிக்கப்பட்டது. அதில் குறைந்த முக்கியத்துவம் உடையது.
1. எல்லா ஊடகங்களும் ஒரே இடத்திலிருந்து அறிவுறுத்தல் செய்யப்பட இயலும்.
2. எல்லா ஊடகவியலாளரும் ஒரே இடத்தில் இருந்து கேள்விகளைக் கேட்பதற்கு இயலும்.
3. எல்லா ஊடகங்களும் ஒரே செய்தியைப் பெற்றுக் கொள்ள இயலும்.
4. எல்லா ஊடகவியலாளருடைய கருத்துக்களையும் ஒரே நேரத்தில் பெறலாம்.
5. எல்லா அரசியல்வாதிகளை சந்திக்க முடியும்.

26) அச்சிடல் தொழில்நுட்பத்தின் தோற்றம் தொடர்பில் வரலாற்றில் ஆக முன்னையதும் மிகப் பின்னையதுமான தகவல்கள் கிடைக்கப்பெற்றது.
1. இங்கிலாந்திலும் ஜேர்மனியிலும்.
2. கிரேக்கத்திலும் உரோமிலும்.
3. இந்தியாவிலும் அமெரிக்காவிலும்
4. சீனாவிலும் ஜேர்மனியிலும்.
5. எகிப்திலும் ஜேர்மனியிலும்.

27) பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A.- செய்தியொன்றின் வெளிப்படையான அர்த்தத்தையும் கடந்து புரிந்து கொள்ளல்
B- தனியாள் அனுபவங்களுடன் தொடர்பிலிருத்தல்.
C- ஊடக விளங்கறிவின் விருத்தி
D- பொழுது போக்கின் தரமுயர்வு.

மேற்குறித்தவற்றுள் வெகுசன ஊடகத்தில் படைப்பாக்க வாசிப்புடன் ( Creative reading) தொடர்புடைய மிகப்பொருத்தமான கூற்றுக்கள் எவை?
1. A,B ஆகியன மாத்திரம்
2. B,C ஆகியன மாத்திரம்
3. A,B,C ஆகியன மாத்திரம்
4. A,C,D ஆகியன மாத்திரம்
5. B,C,D ஆகியன மாத்திரம்

28) பாரம்பரிய ஊடகங்களின் முக்கியத்துவம் பற்றி வகுப்பறையில் நடந்த கலந்துரையாடல் பின்வருமாறு.
1. நிலா:- பொதுமக்கள் அவற்றில் நம்பிக்கை வைத்துள்ளனர்.
2. ஜெயா:- அவற்றில் பயன்படுத்தப்படும் குறியீடுகளும் சைகைகளும் பரிச்சயமானவை.
3. வீணா:- அவை பிரநிதித்துவம் செய்பவை உயர் குடிமக்களின் சிந்தனைகள் அல்ல
4. காவ்யா:- ஆனால் அவற்றில் செயலுக்கமுள்ள பார்வையாளரின் பங்கேற்பு இருப்பதில்லை.

மேற்குறித்த கூற்றுக்களில் சரியான சிந்தனைகளை முன்வைப்போர்
1. நிலா, காவ்யா
2. நிலா, ஜெயா
3. நிலா, ஜெயா, காவ்யா
4. நிலா, ஜெயா, வீணா
4. நிலா, ஜெயா, காவ்யா, வீணா

29) ஒரு குறித்த செய்திப் பத்திரிகையொன்றின் ஆசிரியர் பீடக் கொள்கைகள் பின்வருமாறு பட்டியற்படுத்தப்பட்டன.
A.- மரணமானோரின் உடலங்களின் படங்களைப் பிரசுரிக்காது தவிர்த்துக் கொள்ளல்.
B- மதுசார பானங்கள் குறித்த விளம்பரங்களைப் பிரசுரிக்காதிருத்தல்
C- ஆசிரிய விளம்பரங்களை ( advertorials) அனுமதிக்காது விடல்
D- சூதாட்டம் தொடர்பான செய்திகளை நிராகரித்தல்

மேற்படி கொள்கைகளை அறிமுகஞ்செய்யப் போதுமான மிகப் பொருத்தமான சொல்லாடலாக அமைவது எது.

1. தனிக்கை 2. சுயகட்டுப்பாடு 3. சட்டத்தடைகள்
4. நுகர்வோர் பாதுகாப்பு 5. கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம்.

30) பின்வரும் நடத்தைகளில் ஆளுள் தொடர்பாடல் தேர்ச்சியாக அமையாத ஒன்று.
1. கற்பனை செய்தல்
2. பகற்கனவு காணுதல்
3. மீள நினைவூட்டல் 4. கடந்து சென்றவை பற்றிய நினைவு
5. நினைவில் நிறுத்துதல்

31) சமூகவியலாளர்களின் கருத்துப்படி சமூக, பொருளாதார பண்பாட்டு அம்சங்கள் நாட்டாரியலின் மூலம் கற்றுக்கொள்ளப்பட முடியும். இது மிக அண்மித்தாக இருப்பது.
1. வரலாற்றுக் கற்கையுடன். 2. மானிடவியல் கற்கையுடன்
3. உளவியல் கற்கையுடன் 4. தோல்பொருளாய்வுக் கற்கையுடன்
5. படைப்பாக்கக் கற்கையுடன்

32) சமூகத்தின் வளர்ச்சிக்குக் காரணமாகும் வகையில் முரண்பாடுகளைப் பயன்படுத்தக் கூடியதாக அமையும் வழிமுறை.
1. தீர்வு 2. ஒடுக்குதல் 3. முகாமைத்துவம்
4. மத்தியஸ்தம் 5. நிலைமாற்றுதல்.

33) இலத்திரனியல் ஊடக நிறுவனங்களின் உருவாக்கத்தில் வலுவான போட்டித்தன்மை அதிகரிப்பதற்குக் காரணம்.
1. அரசியல் குடும்ப அதிகாரத்தின் உறவு நிலை.
2. வரையறுத்த அளவில் காணப்படும் அலை வரிசை ஒதுக்கீட்டு அமைப்பு.
3. வர்த்தக வாணிப முயற்சிகளின் நேரடிப் பங்கேற்பு காணப்படுதல்.
4. பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குவதற்கான பரந்த மத்தியஸ்தப் பாணி
5. வெகுசனத் தொடர்பாடல் செயன்முறையின் அனுசரணையாளராகச் செயற்படுதல்

34) ஒரு செய்தியை சரியாகப் புரிந்து கொள்ளும் ஆற்றலும், அதனை வியாக்கியானம் செய்து கொள்ளலும் ஒரு நபருக்கு கை வரப் பெற்றது.
1. விமர்சன வழியில் 2. விளங்கறிவு (Litery) வழியில்
3. ஆய்வின் வழியில் 4. ஆழ் பரிவின் வழியில்.
5. மதிப்பீட்டின் வழியில்

35) ஒரு படைப்பாக்கச் செய்தியில் காணக்கிடைக்கக் கூடிய அதி முக்கியமான அம்சம்.
1. அநுமானிப்பு இயல்பு 2. ஒலி- காட்சி இயல்பு
3. பல வண்ண இயல்பு 4. சுயம் அல்லது உண்மைத் தன்மை
5. அளிக்கை செய்யும் இயல்பு.

36) " ஊடக எழுத்தறிவு என்பது ஊடக உள்ளடக்கம் ஒன்றை அணுகக் கூடிய புரிந்து கொள்ளக் கூடிய விமர்சன ரீதியாக மதிப்பிடக்கூடிய மற்றும் அதனை உருவாக்கக் கூடிய வல்லமையாகும்" எனக் கூறியவர்.
1. வில்பர் ஷிராம் 2. ஜேம்ஸ் போட்டர்
3. அமெரிக்கத் தொடர்பாடல் ஆணைக்குழு 4. ஐரோப்பிய ஆணைக்குழு
5. மக்ப்ரைட் அறிக்கை

37) பண்பாட்டுப் பரிமாற்றத்தில் ( Cultural Exchange) காணக் கிடைக்காது.
1. ஒரு சமூக மாற்றம் 2. திட்டப்படி நடப்பது.
3. திட்டமின்றியே நடப்பது 4. வன்மையான சமூக மரபுகள் இருத்தல்
5. சமூக ஒருங்கிருத்தலுக்குப் பங்களித்தல்.

38) பொது வாழ்க்கை முறை ( Common life style) தொடர்பில் ஒரு விழுமிய அமைப்பொழுங்கின் தேவையை மக்களுக்கு அறிவுறுத்தும் ஊடகப் பணியோடு தொடர்புடையது.
1. பரப்புரை (Propoganda) 2. சுய எண்ணக்கரு 3. சமூகமயமாதல்
4. ஆழ்பரிவு 5. பார்வை நோக்கு

39) பல்லினப் பண்பாடுகளுடன் கூடிய பார்வையாளர்கள் மத்தியில் பேச்சாளர் ஒருவர் உரையாற்றும் போது அவர் அவசியம் .

A.- சைகைகள் குறித்த பண்பாட்டு அர்த்தங்களைத் தெரிந்திருக்க வேண்டும்.

B- இன மையப் பேச்சை தவிர்க்க வேண்டும்

C- தனது கருத்தை அழுத்திச் சொல்ல வேண்டும்.

மேற்குறித்த கூற்றுக்களில்.

1. A, மட்டும் சரியானது.
2. Aயும் B யும் மட்டும் சரியானது.
3. Aயும் C யும் மட்டும் சரியானது.
4. Bயும் C யும் மட்டும் சரியானது.
5. A,B,C ஆகிய அனைத்தும் சரியானது.

40) ஊடகச் செயற்பாட்டைப் பாதிக்கக் கூடிய வேறுபட்ட காரணிகளைக் கொண்ட சில குழுக்கள் கீழே தரப்படுகின்றன.

A.- ஊடக உரிமையாளர், சட்டம், சுய கட்டுப்பாடு

B- விளம்பரதாரர்கள், பொறுப்புக்கள், ஊடாக மூலகங்கள்

C- ஊடக நிறுவனங்கள், அரசு ஊடக வியலாளர்கள்.

இவற்றுள் ஊடகத் தொழிற்பாட்டுடன் தொடர்படையவை உள்ளடக்கப்பட்டிருப்பது.

1. குழு A இல்
2. குழு A இலும் B இலும்
3. குழு A இலும் C இலும்.
4. குழு B இலும் C இலும்
5. A,B,C ஆகிய சகல குழுக்களிலும்.

41) வானொலி ஊடகவியலாளர் ஒருவருக்கு மிக முக்கியமானது.

1. சிறந்த மொழியாற்றல் மற்றும் வேகமாக உச்சரிக்கும் ஆற்றல்
2. தெளிவான, ஆழமான குரலும் கற்பனா சக்தியும்.
3. கற்பனை சக்தியும் சிறந்த மொழியாற்றலும்.
4. சிறந்த மொழியாற்றலுடம் சரியாக உச்சரிக்கும் திறனும்.
5. ஆழமான குரலும், கற்பனா சக்தியும்.

42) முரண்பாட்டு சூழ்நிலை உருவாவதற்கு ஏற்புடைய கலாசாரமாக அமையக் கூடியது.

1. அறிவு சமூக கலாசாரம்
2. வெகுசன ஊடக கலாசாரம்.
3. மேலைத்தேய கலாசாரம்.
4. கீழைத்தேய கலாசாரம்.
5. பல்லின சமூக கலாசாரம்.

43) பின்வருவனவற்றுள் பொதுமக்கள் தொடர்பு (Public Relation) நோக்கத்தை பிரதிபலிப்பது.

1. மக்கள் குழுவிடம் பயனுறுதிமிக்க தொடர்புகளை பேணுதல்
2. முறைசார் நிதி முகாமையை பேணுதல்.
3. வெகுசன ஊடகங்களை நன்றாக பயன்படுத்தல்.
4. பல்வேறு தரப்பினரிடம் பொறுப்புக்களை கையளித்தல்.
5. திட்டத்தை தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்.

44) Educationan + Entertainment = Edutainment குறிப்பது.

1. கல்வியையும் இரசணையுணர்வையும் இணைத்தல்
2. கல்வியையும் கட்டுருவாக்க சிந்தனையையும் இணைத்தல்
3. கல்வியையும் பொழுது போக்கு நிகழ்ச்சிகளையும் இணைத்தல்.
4. கல்வியையும் அழகியல் உணர்வையும் இணைத்தல்
5. கல்வியையும் அபிவிருத்தி சிந்தணையையும் இணைத்தல்

45) ஊடகங்களின் செயற்பாடுகளை விஞ்ஞான முறையூடாக ஆராய்கின்ற செயன்முறை ஊடாக ஆய்வுக்குட்பட்டதாகும். பகுப்பாய்வின் ஊடாக இணங்காணப்பபட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு அவற்றை தீர்ப்பதற்கான வழிமுறைகளை முன் வைத்தல் செயற்பாடு பின்வருமாறு அழைக்கப்படும்.

1. தகவல் சேகரித்தல்
2. தகவல் பகுப்பாய்வு.
3. மதிப்பீட்டு செயன்முறை
4. பிரச்சினை இணங்காணல்.
5. முன்மொழிவுகள்.

46) ஊடகம் ஒன்றில் ஒளிபரப்பாகிய நிகழ்ச்சி ஒன்றின் கதையை விமர்சித்தல் செயன்முறை ஊடக விமர்சன அடிப்படையில்.

1. ஆக்கியோனை விமர்சித்தல்
2. ஊடக உள்ளடக்கத்தை விமர்சித்தல்
3. ஊடக தயாரிப்பை விமர்சித்தல்.
4. பெறுநர்களை விமர்சித்தல்.
5. ஊடக தாக்கத்தை விமர்சித்தல்.

47) ஆக்கத் தொடர்பாடல் வெளிப்பாட்டுக்கு எடுத்துக் காட்டாக அமையாதது.

1. ஆசிரியர் தலையங்கம் (Editorial)
2. செய்தி அறிக்கை (News repotrt)
3. சித்தரிப்பு எழுத்துக்கள் (Feature writing)
4. கட்டுரைகள் (Articles)
5. செய்திக்கட்டுரை (News Articles)

48) பின்வரும் கூற்றுக்களில் உலகமயமாதல் செயன்முறை பரதிபலிக்காதது.

1. மேலைத்தேய பண்பாட்டின் பரவுகை.
2. முதலாளித்துவ பொருளாதாரத்திற்கு சார்பானது.
3. தேசியம் வலுப்பெற்று பூகோளமயம் நலிவடைதல்
4. நவீனத்துவ அடையாளங்களுடன் நெருக்கமானது.
5. சுதேச பண்பாட்டிற்கு அச்சுறுத்தலானது.

49) " ஏழ்மையற்றதும் சொகுசற்றதுமான சமூகமொன்று" என்ற அடிப்டை தூர நோக்கல் அபிவிருத்தி
பணியில் ஈடுபடுகின்ற நிறுவனம்.

1. சுகாதார பணிமனை
2. சமுர்த்தி அதிகார சபை
3. பிரதேச அபிவிருத்திசபை.
4. சணச வியாபாரத் திட்டம்
5. சர்வவோதய வியாபாரத் திட்டம்

50) சுய தணிக்கை (Self- censorship) என்பது .

1. ஊடக உரிமையாளரின் தணிக்கைக்கு உட்படுத்தலாகும்.
2. ஒழுக்க நெறிக் கோட்பாடுகளுக்கு எதிரானது.
3. பொது நியமங்களைக் கருத்தில்க் கொண்டு தகவல்களை தணிக்கை செய்தல்.
4. அரசினால் தகுதி வாய்ந்த அதிகாரி ஒருவர் நியமிக்கப்படல்.
5. சர்வதேச சட்டங்களுக்கு கட்டுப்படல்.

The National e-learning Portal for The General Education

முழுப் பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம் Provincial Department of Education, Northern Province

**மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்**
**Provincial Department of Education, Northern Province**

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) முன்னோடிப் பரீட்சை 2017 மே**
**General Certificate of Education (Adv. Level) Pilot Examination, 2017 May**

தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் **II**
**Communication and Media Studies II**

**29 T II**

மூன்று மணித்தியாலம்
**Three Hours**

அறிவுறுத்தல்:

1. **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.
2. ஒவ்வொரு வினாவின் விடைக்கும் ***20* புள்ளிகள்** வழங்கப்படும்

***01)*** **"தொடர்பாடல் ஒரு செயலொழுங்காகும் . அது செவ்வனே செயற்படுவது அதற்குரிய அடிப்படை அம்சங்கள் அனைத்தும் உரிய முறையில் தொடர்புபட்டுச் செயற்பட்டால் மட்டுமேயாகும்.**

1. தொடர்பாடற் செயலொழுங்கின் அடிப்படை அம்சங்கள் நான்கினைக் குறிப்பிடுக?
2. தொடர்பாடல் பணிகள் பல இருப்பினும் அதில் பிரதானமான நான்கு பணிகளைக் குறிப்பிட்டு அவற்றுள் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக,?
3. வெகுசன ஊடகங்களில் வாயிற்காப்பாளர்களின் வகிபாங்கினால் செய்திகளின் ஏற்படும் மாற்றங்கள் இரண்டை விளக்குக?
4. பிரதான தொடர்பாடல் இடையூறுகள் இரண்டினைக் குறிப்பிட்டு செய்திப் பத்திரிகை ஊடகத்தில் தோன்றக்கூடிய வகைகள் ஒவ்வொன்றுக்கும் இரண்டு உதாரணங்கள் தந்து விவரிக்குக?

***02)*** **"ஒவ்வொரு நாடும் தேசிய அபிவிருத்தி மீது கவனம் செலுத்துகிறது என்பது வரலாற்று ரீதியாக தெரிகின்றது"**

1. தேசிய அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு அவசியம் கவனம் செலுத்த வேண்டிய நான்கு விடயப்பரப்புக்களைப் பெயரிடுக?
2. ஏவரெட் எம் ரொஜரஸ்ரினால் பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தியின் இலக்குகளுக்கு பங்களிக்கக் கூடிய இரண்டு உத்திகளைப் பெயரிட்டு அவற்றுள் ஓர் உத்தி எவ்விதம் தொழில்சார் களத்தில் நடைமுறைப்படுத்தப்படலாம் என்பதை விபரிக்குக?.
3. அபிவிருத்தித் தொடர்பாடல் உத்தியாகப் பயன்படுத்தக்கூடிய நான்கு பாரம்பரிய நாட்டாரியற் கலைகளைப் பெயரிடுக. அவற்றுள் இரண்டை எவ்விதம் தொடர்பாடலில் பயன்படுத்தப்பட முடியும் என்பதை உதாரணத்துடன் விளக்குக?.
4. அபிவிருத்தித் தொடர்பாடல் நிகழ்ச்சிகளில் சமூகத்தின் பங்களிப்பை ஊக்குவிக்க கைக்கொள்ளக் கூடிய நான்கு வழிமுறைகளைத் தனித்தனியாக விவரிக்குக?

03) **" முரண்பாட்டுச் சூழ்நிலை ஒருவரின் சிந்தனைப் போக்கில் இருந்து சர்வதேச மட்டம் வரை வியாபகம் பெறக்கூடிய தன்மையைக் கெண்டமைந்தது**".

1. தனிநபர் ஒருவரின் தேவைகள் நிறைவேற்றப்படாமை முரண்பாட்டு சூழ்நிலை உருவாவதற்கு அடிப்படையாக அமைகிறது. மாஸ்லோவின் தேவைக் கூம்பில் உள்ளடக்கப்பட்டுள்ள தேவை படிமுறைகள் ஐந்தினையும் தர ஒழுங்கு முறைப்படி பெயரிடுக?
2. சிக்மன்ட் பிராய்ட் (Sigmund Freuid) உளப்பகுப்பின் அடிப்படையில் சுப்பர் ஈகோ (Super Ego) உளநிலையில் ஒருவரிடம் அவதானிக்கப்படக்கூடிய இரு இயல்பு நிலைகளைக் குறிப்பிடுக?
3. மன அழுத்தத்தின் (Stress) பிடியிலிருந்து விடுபடப் பிரயோகிக்கக் கூடிய ஆறு தொடர்பாடல் வழிமுறைகளைப் பெயரிட்டு அவற்றுள் ஒன்றை விபரிக்குக?
4. ஊடக வன்முறையிலிருந்து விலகியிருப்பதற்காகப் பெறுநர் கொண்டிருக்கக் கூடிய நான்கு தேர்ச்சிகளை விவரிக்குக?

04) **"வெகுஜன ஊடகங்களைக் கிரமமாகப் பயன்படுத்தும் விமல் ஒரு பெறுநர் ஆவார். அவற்றினால் தரப்படும் செய்திகள் தொடர்பில் அவர் முழுமையான நம்பிக்கை கொண்டு பணியாற்றுகின்றார். ஆனால் வெகுஜன ஊடகங்கள் பற்றிய ஓர் ஆய்வு அறிவை அவர் கொண்டிருக்கவில்லை"**

1. விமல் எந்த வகையான பெறுநர் ஆவார்?
2. ஊடகக் கல்வியின் முக்கியத்துவம் தொடர்பான ஆறு அம்சங்களைப் பெயரிட்டு அவற்றுள் ஒன்றைச் சுருக்கமாக விவரிக்குக?
3. ஊடகச் சந்தையின் (Media market) செயற்பாட்டின் அம்சங்களுடன் விளக்குக?
4. ஊடக விமர்சகர் ஒருவருடைய பண்புகள் நான்கினைப் பெயரிட்டு அவற்றுள் இரண்டினை விபரமாக விளக்குக?

05)
1. ஊடகப் பண்பாட்டின் நான்கு இயல்புகளைப் பெயரிடுக?
2. செய்திப்பத்திரிகையொன்றின் தலையங்கங்களை எழுதும் போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய நான்கு அம்சங்களைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக?
3. உலகமயமாக்கல் செயன்முறை மொத்த மனித சமூகத்தையும் ஒரு கிராமமாக மாறியுள்ளது. உலகமயமாக்கல் செயன்முறையினால் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் நான்கினை உதாரணங்களுடன் விளக்குக?.
4. வானொலி ஊடகத்திற்கான தகவல் அறிக்கையிடல் செய்திப்பத்திரிகையிலிருந்தும் வேறானது. அவ்வாறான மூன்று வேறுபாடுகளைத் தனித்தனியாகக் விபரிக்குக?

06) **வானொலி ஊடகமொன்றால் நாடாத்தப்பட்ட வினாடி வினா போட்டியில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்ட ரவிக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பொன்று கிடைத்தது.**

1. வானொலி ஊடகத்துக்கே உரித்தான தனித்துவமான இரண்டு இயல்புகளைப் பெயரிடுக?
2. செய்திப் பத்திரிகையிலும் வானொலி ஊடகத்திலும் பயன்படுத்தப்படும் மொழி தொடர்பில் அவதானிக்கப்படக் கூடிய நான்கு முக்கிய வேறுபாடுகளை உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக?.
3. வெகுஜனத் தொடர்பாடலின் முக்கிய இயல்புகள் நான்கினையும் பெயரிட்டு அவற்றுள் இரண்டினை விவரிக்குக?

4. ஒரு செய்தியை படைப்பாக்க வழியில் அளிப்பதற்கான உபாயங்களைத் தீர்மானிப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டிய நான்கு அம்சங்களைக் குறிப்பிட்டு அவற்றுள் இரண்டினை உதாரணங்களுடன் விளக்குக?.

07) **"வெகுஜன ஊடகச் செய்திகளைச் சரியாக உள்வாங்கிக் கொள்வதன் மூலம் பெறுநர் அறிவார்ந்த பிரசையாகின்றார்"**

1. வெகுஜன ஊடகப் பெறுநர்களின் இரண்டு பிரதான வகைகளைப் பெயரிடுக?
2. சிறுவர்கள் மீது வெகுஜன ஊடகங்கள் ஏற்படுத்தவல்ல மூன்று எதிர்மறை விளைவுகளைச் சுருக்கமாக விவரிக்குக?.
3. ஊடக விமர்சன போக்கு ஊடக அறிவுமிக்க சமூகத்திற்கு எந்த வகையில் முக்கியத்துவம் வகிக்கின்றது. என்பதை நான்கு காரணிகளை அடிப்படையாகக்க கொண்டு விபரிக்குக?
4. ஊடக விமர்சனம் தொடர்பான நான்கு அணுகு முறைகளை ஊடக வெளியீட்டினை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக?.

The National e-learning Portal for The General Education